**செய்தி வெளியீடு எண்.606** **நாள்.25.9.2007**

# இந்து சமய அறநிலையத்துறையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குதல்

பணிக்காலத்தில் இறந்துபோன அரசு ஊழியர்களின் குடும்பத்தினரின் துயர்துடைக்கும் பொருட்டு, அவரின் குடும்ப வாரிசு ஒருவருக்கு கருணை அடிப்படையில் அரசுப்பணி வழங்கும் திட்டம் 1972 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையிலிருந்து வந்தது.

ஆனால், கடந்த ஆட்சிக் காலத்தில் 01.03.2002–ம் தேதிய உத்திரவின்படி, இத்திட்டம் செயல்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. **மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் தற்போதைய அரசு பதவியேற்றதும்**, அரசு ஊழியர்களின் துயர்துடைக்கும் நடவடிக்கையாக, மேற்படி திட்டத்தினை மீண்டும் நடைமுறைப்படுத்திட 19.07.2006–ல் உத்தரவிட்டது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் திட்டத்தினை செயல்படுத்தும் முகத்தான் இந்து சமய அறநிலையத்துறையில் பணியாற்றியபோது காலமான அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் முதற்கட்டமாக பணியிலிருந்தபோது காலமான 11 அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையிலான பணிநியமன உத்தரவு மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் அவர்களால் 25.09.2007 அன்று இந்து சமய அறநிலையத்துறை, ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கப்பட்டது.

மேற்படி நிகழ்ச்சியின்போது, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, செயலாளர் திரு. து. இராஜேந்திரன், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் திரு. த. பிச்சாண்டி, இ.ஆ.ப., மற்றும் இணை ஆணையர்கள் உடனிருந்தனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.